பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 27 வியாழக்கிழமை 11.03.2021 கதிர் 357

## கொரோனாவால் மேலும் நால்வர் பரிதாப மரணம்!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் நால்வர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. மூன்று ஆண்களும், பெண்ணொருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

2

### இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்து!

# உண்ணாவிரதப் போராட்டத்தில் கிழக்கில் முஸ்லிம்களும் இணைவு

**'சர்வதேசமே! இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்து!!' என்று வலியுறுத்தி அம்பாறை மாவட்டம், பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலில் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் முஸ்லிம் மக்களும் இணைந்துள்ளனர்.**

**கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இந்தப் போராட்டம் 7ஆவது நாளாக இன்றும் தொடர்கின்றது.**

2



## இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே இன்று திருக்கேதீச்சரத்திற்கு விஜயம்



மன்னார்,மார்ச் 11

பாடல் பெற்ற திருத்தலமான மன்னார் திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி திருவிழா மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மஹா சிவராத்திரி நாளான இன்று காலையில் மன்னார் திருக்கேதீஸ்வர திருத்தலத்திற்கு வருகை தந்து இந்திய அரசின் உதவியுடன் நடைபெற்று வரும் கருங்கல் சிற்ப வேலைகளையும் இதர வேலைகளையும் பார்வையிட்டமையோடு வழிபாடுகளிலும் கலந்து கொண்டார்.

மாலையில் அவர் யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்தார்.

## சஜித்தின் ஆட்சி அமையமாட்டாது

### பொன்சேகாவின் கருத்துக்கு இராஜாங்க அமைச்சர் பதில்

சரத் பொன்சேகா கூறுவதுபோல் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சி ஒருபோதும் அமையாது. எமது ஆட்சியில் ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள்

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்தார்.

2

### உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

## சர்வதேச குழுவை இலங்கைக்கு அழைத்து விசாரிக்க வேண்டும்!

### சஜித் அணி வலியுறுத்து



சர்வதேச சுயாதீன விசாரணைக்குழுவொன்றை இலங்கைக்கு அழைத்துவந்து, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்தினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணை

2

## ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் உண்மை வெளிச்சத்துக்கு வரும்

### பொன்சேகா எம்.பி. தெரிவிப்பு



எதிர்காலத்தில் அமையவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் அனைத்து விடயங்களும் கண்டறியப்பட்டு, கத்தோலிக்க மக்களுக்குநீதிபெற்றுக்கொடுக்கப்படும்.

- இவ்வாறு ஐக்கிய

2

## 1,000 ரூபா வழங்காவிட்டால் 6 மாதம் சிறைத் தண்டனை

### தொழில் திணைக்களம் எச்சரிக்கை

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாளாந்த சம்பளத்தை வழங்காத தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்காத தோட்டநிறுவனங்களின் அதிகாரிகளுக்கு, அபராதம் மற்றும் 6 மாத சிறைத்தண்டனை வழங்கப்படும் என்று தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திர கீர்த்தி தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 5ஆம் திகதி தொடக்கம் செல்லுபடியாகும் வகையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கான விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்குக்

2

NEW SCIENCE HALL
2023 A/L
கணித, உயிரியல் பிரிவு
நேரடி, நிகழ்நிலை வகுப்புக்கள்
Tamil & English Medium
வகுப்புக்கள் யாவும் நடைபெறவுள்ளன.
ஆரம்பம் :- 14.03.2021
நேரம் :- 9.30 am
Kannathiddy Road, Jaffna.

A/L 2023
கலை, வர்த்தகம் கணிதம், உயிரியல்
NEC
நாளை காலை 9.00 மணி முதல் ஆரம்பம்
குறிப்பு:- 2023 இல் புதிதாக இணையவுள்ள மாணவர்கள் தமது பாடத் தெரிவினை மேற்கொள்ளுவதற்கும் மாணவர் முன்னேற்றத்தை சிறப்பாக வழி நடத்தவும் கலை, வர்த்தகம், கணிதம், உயிரியல் பாடங்களின் புலமை வாய்ந்த ஆசிரியர்களினால் மார்ச் மாத கட்டணமின்றி விசேட வழிகாட்டல் சேவை. வழங்கப்படுகின்றது.
A/L 2021, 2022, Day Class
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.
076 166 1986

## சர்வதேச குழுவை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணி என்ன, பிரதான சூத்திரதாரி யார் என்பது தொடர்பில் அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்கு தவறியவர்கள் தொடர்பிலேயே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சஹ்ரானைக் கைது செய்வதற்கு ரி.ஐ.டியின் பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த நாலக சில்வா தயாரானார். அப்போது அவருக்கு எதிராக திடீரென குற்றச்சாட்டு வந்தது. அவர் கைது செய்யப்பட்டார். அதன்பின்னர் ஷானி அபேசேகரவும் முடக்கப்பட்டார். எனவே, இதன் பின்னணியில் ஏதோ மர்மம் உள்ளது. விசாரணையை மறைப்பதற்கு முயற்சிக்கப்படுகின்றது. சாரா எங்கே? அவரை உடன் நாட்டுக்குக் கொண்டு வரவேண்டும்.

ஐ.எஸ். அமைப்புக்கு 2015 இல் ஒருவரே சென்றிருந்தார். சம்பவத்தின் பின்னணியில் ஐ.எஸ். அமைப்பு இருக்காது. இந்தியாவில் இருந்து ஒருவர் இயக்கி இருக்கக்கூடும் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் உள்ளது.

ஹக்கீம், ரிஷாத்தை விமர்சிப்பவர்கள், அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக அவர்களின் கட்சி உறுப்பினர்களின் வாக்குகளைப் பெறுகின்றனர். இதன்மூலம் அரசின் இரட்டை நிலைப்பாடு அம்பலமாகின்றது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை வைத்து இந்த அரசே நன்மை அடைந்தது. தாக்குதலுக்கு அவர்களும் பொறுப்புக்கூற வேண்டும். உண்மையை மூடி மறைப்பதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது. எனவே, சுயாதீன சர்வதேச குழுவை அழைத்துவந்து இது தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோருகின்றோம் - என்றார்.

## சஜித்தின் ஆட்சி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி விசாரணை அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில்கலந்துகொண்டுஉரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத் தெரிவுக்குழுதான் கண் துடைப்பு நாடகம். ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை என்பது இறுதியானதுஅல்ல. அதில்நல்லவிடயங்களும் உள்ளன. ஏற்றுக்கொள்ள முடியாத சில விடயங்களும் உள்ளன. எது எப்படி இருந்தாலும் குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் - என்றார்.

## 1,000 ரூபா ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைந்தபட்ச நாளாந்த சம்பளமாக 900 ரூபாவும், வரவு - செலவுத் திட்ட சலுகை கொடுப்பனவாக 100 ரூபாவும் வழங்கப்படவுள்ளன என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஐக்கிய மக்கள் சக்தி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி விசாரணை அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில்கலந்துகொண்டுஉரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் அல்ல என்பது அனைவருக்கும் தெரியும். ஆனாலும், அவர்தான் பிரதானி எனக் காண்பிப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்புக்குக் கூட தற்கொலை தாக்குதல் போராளி ஒருவரை உருவாக்குவதற்குப் பல வருடங்கள் எடுத்தன. எனவே, சஹ்ரான் திடீரென உருவான நபர் கிடையாது. 2005 காலப்பகுதியில் இருந்து அவர் கருத்தியலை விதைத்து வந்துள்ளார். 2014 வரை அவருக்கு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. இது தொடர்பில் உரிய தகவல் வெளியிடப்படவேண்டும்.

ஜனாதிபதி ஆணைக்குழு என்பது நாடகம். எனவே, நாடகம் முடியும்போது நிச்சயம் உண்மை தெரியவரும்.

எமது ஆட்சியின்கீழ் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அனைத்து விடயங்களும் கண்டறியப்படும். கத்தோலிக்க மக்களுக்கு நீதி நிவாரணம் பெற்றுக்கொடுக்கப்படும். அப்போது இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் அனைவருக்கும் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும் - என்றார்.

(மேலும் விரிவான செய்தி 03 ஆம் பக்கத்தில் )

## உண்ணாவிரதப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டத்தில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான நீதிக்கான பேரணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் கல்முனை இளைஞர் சேனையின் முன்னாள் தலைவருமான தாமோதரம் பிரதீபன், நாவிதன்வெளி பிரதேசசபை உறுப்பினர் என்.தர்சினி, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபை உறுப்பினர்களான அழகக்கோன் விஜயரட்ணம், பொன் செல்வநாயகம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் தலைவர் துஷானந்தன், ஜோசப் பராராசசிங்கம் மக்கள் அமைப்பின் தலைவி கந்தையா கலைவாணி உள்ளிட்ட பலரும் பங்கேற்றுள்ளனர். இவர்களுடன் முஸ்லிம் மக்களும் இன்று இணைந்துகொண்டனர்.

சுழற்சி முறையிலான இந்தப் போராட்டத்தை பல்வேறு தடைகளை உடைத்து முன்னெடுத்து வருகின்றோம். அரசு பல தவறுகளைச் செய்துள்ளது. அதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையைக் கோரியே இந்தப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம். இலங்கை மீது சர்வதேச குற்றவியல் விசாரணையைக் கோரி லண்டனில் வசித்து வரும் பெண் அம்பிகை செல்வகுமார் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் இன்று 13 ஆவது நாளாகவும் தொடர்கின்றது. அவருக்கு ஆதரவு வழங்கியும் சுழற்சி முறையிலான எமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம் - என்று அம்பாறை உண்ணாவிரதப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

## கொரோனாவால் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 515 ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

**மஞ்சள் கன்று விற்பனைக்கு**

1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.

**தொடர்புகளுக்கு 021 492 7778**

**இஞ்சி கன்று விற்பனைக்கு**

தரமான இஞ்சி கன்று விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு 021 492 7778**



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

# அடிசறுக்கும் வெளியுறவு

இலங்கையின் வெளிவிவகார அமைச்சு மற்றொரு இராஜ தந்திர நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது.

மியன்மாரில் (பர்மாவில்) நோபல் சமாதானப் பரிசு பெற்ற ஆங் சாங் சூகியின் ஜனநாயக அரசை இராணுவச் சதிப் புரட்சி மூலம் வீழ்த்தி, அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் இராணுவ ஆட்சிப் பீடத்தை இலங்கை வெளிவிவகார அமைச்சு சத்தம் சந்தடியின்றி அங்கீகரித்து, நாட்டுக்குப் பேரிழுக்கைத் தேடித் தந்திருக்கின்றது எனக் கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

வங்காள விரிகுடா நாடுகளின் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான அமைப்பின் (BIMSTEC) தற்போதைய தலைமைத்துவம் இலங்கை வசம் உள்ளது.

இந்த அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் மூத்த அதிகாரிகளின் கூட்டம் எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதியும் –

அந்த அமைப்பின் பிரதான உச்சி மாநாடு ஏப்ரல் மாதம் முதலாம் திகதியும் –

கொழும்பில் நடைபெற இருக்கின்றன.

இந்த அமைப்பில் பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம், இலங்கை, மியன்மார், தாய்லாந்து ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இந்த நிலையில் கடந்த பெப்ரவரி முதலாம் திகதி மியன்மாரில் மீண்டும் இராணுவ சதிப்புரட்சி ஏற்பட்டது. ஆட்சித் தலைவர் ஆங் சாங் சூகியை வீட்டுக் காவலில் அடைத்த இராணுவம் அதிகாரத்தைப் பொறுப்பேற்றது. இந்த இராணுவச் சதிப் புரட்சியை அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் கண்டித்தன. மீண்டும் ஆங் சாங் சூகியின் அரசை ஆட்சியில் அமர்த்தி நிர்வாகத்தை நடத்த அனுமதிக்கும்படி வற்புறுத்தும் மேற்கு நாடுகள், எக்காரணம் கொண்டும் மியன்மார் இராணுவ ஆட்சியை அங்கீகரிக்க மறுத்து வருகின்றன.

அதிகாரத்தைக் கைப்பற்றிய இராணுவ ஆட்சிப் பீடம் தனது வெளிவிவகார அமைச்சராக வூணா மவுங் லுவின் என்பவரை நியமித்திருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில்தான் ஏப்ரல் முதலாம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் வங்காள விரிகுடா நாடுகளின் பல்துறைத் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பின் 17 ஆவது அமைச்சர்கள் மட்ட மாநாட்டுக்கு மியன்மார் இராணுவ ஆட்சியாளர்களின் வெளிவிவகார அமைச்சருக்கு அழைப்பு அனுப்பியிருக்கின்றார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

இப்படி இலங்கையில் நடைபெறும் சர்வதேச மாநாட்டுக்கு மியன்மார் இராணுவ ஆட்சியாளர்களின் அமைச்சரை உத்தியோகபூர்வமாக அழைப்பதும் அந்த இராணுவ ஆட்சியை இலங்கை சத்தம் சந்தடியின்றி அங்கீகரித்து, அதனுடன் இராஜதந்திர உறவாடலை வளர்க்கும் நடவடிக்கை என்று விடயமறிந்த தரப்புகள் விமர்சிக்கின்றன.

மியன்மார் இராணு ஆட்சிக்கு இந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்கு இராஜதந்திர அந்தஸ்து அளித்து அங்கீகாரம் வழங்கியமை மிகக் கேவலமான நடவடிக்கை என்று இலங்கை வெளிவிவகார அமைச்சைப் பிய்த்து உதறிக் கண்டிக்கின்றன சமூக ஊடகங்கள்.

*"மியன்மாரின் ஆயுத முனையில் ஆட்சியைப் பிடித்திருப்பது சர்வதேச பயங்கரவாதக் கும்பல். அந்தக் கும்பலுக்கு இராஜதந்திர அந்தஸ்தும் அங்கீகாரமும் வழங்கி, இந்த அழைப்பைக் கொடுத்தமை மூலம் சர்வதேச பயங்கரவாதத்துக்குக் கொழும்பு துணைபோயிருக்கின்றது. இது குறித்து கொழும்பு வெட்கப்பட வேண்டும். இது கேவலமான நடவடிக்கை"* – என்று சமூக ஊடகங்கள் இலங்கை மீது சேறை வாரியடிக்கத் தொடங்கியிருக்கின்றன.

மியன்மார் இராணுவ ஆட்சியை உலக நாடுகள் பெரும்பாலானவை ஏற்கவோ, வரவேற்கவோ, அங்கீகரிக்கவோ விரும்பாமல் பின்னடிக்கும் சூழ்நிலையில், அந்த ஆட்சிப் பீடத்துக்கு இராஜதந்திர உறவாடலுக்கு வெற்றிலை வைக்கும் கொழும்பின் நடவடிக்கை சர்வதேச உறவாடல் விடயத்தில் மிகக் கேவலமாக நோக்கப்படும் என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

அதுவும், ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட கொழும்பு ஆட்சிப் பீடம் சுயமாகவே இராணுவக் கட்டமைப்பு ஆட்சி முறைமைக்குத் தன்னை மெல்ல மெல்ல மாற்றிக் கொண்டு வருகின்றது என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்துள்ள சூழ்நிலையில் –

இன்னொரு நாட்டில் இராணுவச் சதிப் புரட்சி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் ஓர் இராணுவ ஆட்சியை அங்கீகரிப்பது போல இலங்கை வெளிவிவகார அமைச்சு பகிரங்கமாக நடந்து கொள்வது, உலகுக்கு வித்தியாசமான செய்தி ஒன்றையே கொடுக்கும் என்பது மறுக்கக் கூடியதல்ல.

கோட்டாபயவின் புதிய அரசு வெளிநாட்டு விவகாரங்களைக் கையாளும் சர்வதேச உறவாடலில் தொடர்ந்தும் தவறிழைத்து வருவதாகவே தோன்றுகின்றது. இது நல்லதற்கல்ல என்பதை மட்டும் கூறி வைக்கமுடியும்.

# நாம் அரசு அமைக்கும்போது கத்தோலிக்கருக்கு நீதி கிட்டும்!

## பொன்சேகா நம்பிக்கை தெரிவிப்பு



எமது அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் போது உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்போம். அதேபோன்று இந்தத் தாக்குதல் தொடர்பான அனைத்து தகவல்களையும் தேடுவோம் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையில் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் தொடர்பாக எந்தத் தகவலும் இல்லை என்ற குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களுக்கு குற்றம் தெரிவித்து பயனில்லை. விசாரணைக்குழுவால் பயங்கரவாதிகளை கண்டுபிடிக்க முடியாது. அது தொடர்பான அனுபவம் அவர்களுக்கு இல்லை. தாக்குதலைத் தடுக்கத் தவறியவர்களையே அவர்கள் பெயரிட்டிருக்கின்றனர்.

ஆனால் அரசாங்கம் ஆணைக்குழு அமைத்து தனது பொறுப்பில் இருந்து விலகி செயற்பட்டிருக்கின்றது. ஆணைக்குழு அமைத்து அரசாங்கம் நாடகம் ஒன்றையே மேற்கொண்டுள்ளது.

அதேபோன்று இந்தத் தாக்குதல் தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைத்து அறிக்கை சமர்ப்பித்திருக்கின்றோம். நாடாளுமன்ற தெரிவுக்குழு ஊடாக 50 சாட்சியாளர்களிடம் விசாரணை மேற்கொண்டிருக்கின்றோம்.

ஆனால் ஜனாதிபதி ஆணைக்குழு 450 பேர் வரையானவர்களிடம் சாட்சியம் பதிவு செய்திருக்கின்றது. ஆனால் இரண்டு அறிக்கைகளுக்குமிடையில் பாரிய வித்தியாசம் இல்லை.

மேலும் கடந்த அரசாங்கத்தில் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரசாங்கத்துடன் தான் இருக்கின்றார். மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பு அமைச்சராக இருந்து மேற்கொண்ட தவறை அந்த அரசாங்கத்தில் இருந்த அனைத்து அமைச்சர்களும் பொறுப்புக் கூற வேண்டியதில்லை.

அத்துடன் தாக்குதலால் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதாகத் தெரிவித்து அதிகாரத்துக்கு வந்த அரசாங்கம், தற்போது பௌத்த சிங்கள மக்களையும் மறந்து கத்தோலிக்க மக்களையும் மறந்து செயற்படுகின்றது.

அதனால் அடுத்த தேர்தலில் பௌத்த சிங்கள மக்களின் வாக்குகள் கிடைக்காது என அரசாங்கத்திற்குள் பேசப்படுகின்றது. அதனால் சிறுபான்மை மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள முடியுமான வேட்பாளரை போட்டியிட செய்யவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதனால் எமது அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும்போது பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம். அதேபோன்று தாக்குதல் தொடர்பான அனைத்து தகவல்களையும் தேடுவோம். சிங்கள பௌத்த மக்கள் உட்பட நாட்டு மக்கள் அனைவரதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம். – என்றார்.

# வாழ்க்கைக்கும் மரணத்துக்கும் இடையில் போராடியுள்ளேன்!

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



கொரோனாத் தொற்று சிகிச்சையின் போது தாம் வாழ்க்கைக்கும் மரணத்திற்கும் இடையில் போராடினார் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.


கடந்த ஜனவரி 23 ஆம் திகதி கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு அமைச்சர் தேசிய தொற்றுநோயியல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

பின்னர் சில வாரங்களாக அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த போது செயற்கை சுவாசக் கருவியின் உதவியை எவ்வாறு பெறவேண்டும் என்பதை விளக்கினார்.

குறித்த சந்தர்ப்பத்தில் 'நான் வாழ்க்கைக்கும் மரணத்திற்கும் இடையில் போராடுகிறேன் என்று எனக்குத் தெரியும். எனது உடல்நிலை மோசமடைந்து வருவதை என்னால் காண முடிந்தது, மறுநாள் காலை வரை நான் அதை செய்யமாட்டேன் என உறுதியாக நம்பினேன்' என கூறினார்.

அத்தோடு தேசிய தொற்றுநோயியல் வைத்தியசாலையில் உள்ள மருத்துவ ஊழியர்கள் உள்ளிட்ட முன்னணி ஊழியர்களுக்கு அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

# கொஹுவலவில் காரிலிருந்து வர்த்தகரின் சடலம் கண்டெடுப்பு!



கொஹுவல – ஆசிரி மாவத்தையில் காரொன்றிலிருந்து சடலமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த காரும் சடலமும் தீக்கிரையாகியுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

களுபோவில – ஹாதிய மாவத்தையைச் சேர்ந்த 33 வயதான வர்த்தகரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஹுவல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# இமாசல பிரதேசத்தில் விபத்து பஸ் கவிழ்ந்ததில் 9 பேர் பலி



இமாசல பிரதேசத்தின் சம்பா மாவட்டத்தில் உள்ள தீசா பகுதியில் நேற்று தனியார் பஸ் ஒன்று பயணிகளுடன் சென்று கொண்டிருந்தது. அந்த பஸ்ஸில் 20 இற்கும் மேற்பட்டோர் பயணம் செய்தனர்.

இந்த நிலையில், அந்த பஸ் காலை 10.15 மணியளவில் காலனிமோர் என்ற பகுதி அருகே சென்று கொண்டிருந்த போது, திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து அங்குள்ள 600 அடி பள்ளத்தாக்கில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் பஸ் பள்ளத்தாக்கில் பலமுறை உருண்டு அப்பளமாக நொறுங்கியது. இந்த கோர விபத்தில் பஸ்சில் பயணம் செய்த 9 பேர் இடிபாடுகளில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

11 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த விபத்து தொடர்பாக இமாசல பிரதேச முதல் மந்திரி ஜெய் ராம் தாக்கூர் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

# மம்தா பானர்ஜி அரசியல் நாடகம் ஆடுகிறார் பா.ஜ.க. குற்றச்சாட்டு!



ஒரு சிறிய சாதாரண விபத்தை ஏதோ திட்டமிட்ட பெரிய சதி போல சித்தரிக்க மம்தா பானர்ஜி முயற்சிக்கிறார் என மேற்கு வங்க பா.ஜ.க. குற்றஞ்சாட்டி உள்ளது.

நந்திகிராமில் வேட்புமனுத் தாக்கல் செய்ய சென்ற மம்தா, தம்மை விஷமிகள் சிலர் தாக்கியதாக கூறியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கொல்கத்தா மருத்துவனையில் சிகிச்சை பெறும் அவருக்கு உடலில் சில இடங்களில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

இது குறித்து விமர்சித்துள்ள பா.ஜ.க. தேசிய செயலாளர் கைலாஷ் விஜயவர்கியா, இந்த சம்பவத்தை வைத்து அரசியல் அனுதாபம் தேட மம்தா முயற்சிப்பதாக கூறியதுடன் சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் எனவும் கருத்து தெரிவித்துள்ளார். நந்திகிராமில் தமக்கு வெற்றி வாய்ப்பில்லை என்பதை தெரிந்து கொண்டதால், அனுதாபம் மூலம் வாக்குகளை பெற, மம்தா நாடகம் ஆடுகிறார் என காங்கிரஸ் மூத்த தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரியும் குற்றம் சாட்டி உள்ளார்.

# இரண்டு றடார்கள் பொருத்திய செயற்கைக்கோளை தயாரித்து அமெரிக்காவுக்கு அனுப்பியது இஸ்ரோ



கூட்டு முயற்சிக்காக எஸ் பேண்ட் றடாரைத் தயாரித்து அமெரிக்காவுக்கு அனுப்பியுள்ளதாக இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்துள்ளார்.

இரண்டு றடார்கள் பொருத்தப்பட்ட புவிக் கண்காணிப்புச் செயற்கைக்கோளை விண்ணில் செலுத்த இந்தியாவின் இஸ்ரோவும், அமெரிக்காவின் நாசாவும் 2014ஆம் ஆண்டில் உடன்பாடு செய்தன.

நிசார் எனப்படும் இந்தத் திட்டத்துக்காக எஸ் பேண்ட் றடாரை இஸ்ரோ தயாரித்துள்ளது. இதை நாசா தயாரித்த எல் பேண்ட் ரேடருடன் இணைப்பதற்காக அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இரண்டு றடார்களும் இணைக்கப்பட்ட பின் இந்தியாவுக்குக் கொண்டுவரப்படும். இரண்டு றடார்கள் பொருத்தப்பட்ட செயற்கைக்கோள் 2023ஆம் ஆண்டு ஸ்ரீஹரிக்கோட்டாவில் இருந்து விண்ணில் செலுத்தப்படும் என இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்கைக் கோள் எடுத்து அனுப்பும் படங்கள் மிகவும் துல்லியமாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.

# தற்சார்பு இந்தியா திட்டம் நாட்டுக்கு மட்டுமல்ல உலகிற்கே நன்மை பயக்கும் - பிரதமர் மோடி



இந்தியா சுயசார்பை எட்டுவது உலகிற்கே நன்மையாக முடியும் என பிரதமர் மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சுயசார்பு இந்தியா திட்டத்தின் மையக்கருத்து என்பது இந்தியாவுக்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கே வளங்களை, உருவாக்கு வது ஆகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

சுவாமி சித்பவானந்தாவின் பகவத் கீதையின் டிஜிட்டல் வடிவத்தை காணொலியில் அறிமுகம் செய்து வைத்து மோடி பேசினார்.

பகவத் கீதை நம்மை சிந்திக்க தூண்டுகிறது என்றார் மோடி. நம்மை கேள்வி கேட்பவர்களாகவும், திறந்த மனதுடன் விவாதிக்க நம்மை ஊக்குவிக்கவும் கீதையால் முடியும் என மோடி குறிப்பிட்டார்.

அண்மையில் கொரானாவுக்கு உலகே மருந்து தேடிய போது இந்தியா தன்னால் இயன்றதை செய்தது என்ற மோடி, இந்தியாவின் தடுப்பூசி உலகம் முழுதும் சென்றடைந்ததாகவும் கூறினார்.

# இந்திய கடற்படையில் இணைகிறது கரஞ்ச் நீர்மூழ்கித் தாக்குதல் கப்பல்




இந்திய கடற்படையில் கரஞ்ச் என்ற புதிய நீர்மூழ்கித் தாக்குதல் கப்பல் மும்பை துறைமுகத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

முதன் முறையாக இது பிரெஞ்ச் கூட்டாளிகள் துணையில்லாமல் இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ளது. சுமார் 60 மீற்றர் நீளமுடைய இந்த நீர்மூழ்கிக் கப்பல் பல்வேறு ஆயுதங்களையும் ஏவுகணைகளையும் கடலுக்கு அடியில் இருந்து செலுத்தக் கூடிய வல்லமை பெற்றது.

இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டிருக்கும் நான்காவது நீர்மூழ்கிக் கப்பல் இதுவாகும்.

# நிதின் கட்கரியின் மகள் திருமணத்திற்கு ஸ்கேனியா சொகுசு பஸ் வழங்கப்பட்டதா?



மத்திய அமைச்சர் நிதின் கட்கரியின் மகள் திருமணத்திற்கு சுவீடன் நிறுவனமான ஸ்கேனியா, சொகுசு பஸ்ஸை வழங்கியது என வெளியான ஊடக செய்திகளை அமைச்சரின் அலுவலகம் அடிப்படை ஆதாரமற்றது என மறுத்துள்ளது.

ஸ்கேனியா பஸ்ஸை இந்தியாவில் விற்க பலருக்கு கமின் கொடுத் ததாக ஸ்கேனியா நிறுவனம் கூறியது பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் 2016 இல் நடந்த கட்கரியின் மகள் திருமணத்திற்காக அவரது மகன்களுக்கு நெருக்கமான நிறுவனம் ஒன்றுக்கு ஸ்கேனியா சொகுசு பஸ்ஸை வழங்கியது என சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

நாக்பூரில், காற்று மாசை குறைக்கும் நோக்கில், எத்தனாலில் இயங்கும் ஸ்கேனியா பஸ்களை வாங்க மட்டுமே நிதின் கட்கரி பரிந்துரைத்தார் என்றும் அந்த பஸ்களை அனைத்தும் சோதனை ஓட்டத்திற்குப் பிறகு ஸ்கேனியா நிறுவனத்திடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டதாகவும், நிதின் கட்கரியின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

D.C.M$_N$ - யாழ் நகர்
A/L 2023 கலை, வர்த்தக வகுப்புக்கள்
நாளை காலை 8.00 மணி முதல் ஆரம்பம்
கலைப்பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்
தமிழ் வழமையான முன்னணி ஆசிரியர்
➤ புவியியல் P.S.V. தினேஸ்
➤ இந்துநாகரிகம் T.ஸ்ரீஸ்
➤ அரசியல் பொன் சந்துரு
➤ வரலாறு S.S.Y. பிரதீபன்
➤ அளவையியல் T.T.நீதன்
➤ ஊடகக்கல்வி N. தீபன்
➤ ICT லவேந்திரன்
➤ நாடகமும் அரங்கியலும் M. ஜங்கரன்
➤ கிறிஸ்தவ நாகரிகம் J.J. வசந்தன்
➤ விவசாய விஞ்ஞானம் B.பாலசுதன்
வர்த்தகப் பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்
➤ பொருளியல் S.ஜெயக்குமார்
➤ கணக்கீடு S. தவா
➤ வணிகக் கல்வி N.S. கபில்
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகாமையில்
D.C.M$_N$ - நிர்வாகி 077 011 9434

# மகா சிவராத்திரி தினத்தன்று கோவில்களில் 50 பேர் மட்டுமே



மகாராஷ்டிராவில் சமீப நாள்களாக கொரோனா வைரஸ் அதிதீவிரமாக பரவி வருகிறது. இதையடுத்து தளர்த்தப்பட்ட பல்வேறு கட்டுப்பாடுகளை அரசு மீண்டும் விதித்து வருகிறது. மேலும் பொது இடங்களில் கூட்டம் கூடவேண்டாம், கண்டிப்பாக முகக்கவசம் அணியவேண்டும், சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும் என்பதை அரசு வலியுறுத்துவதோடு, மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது.

இந்த நிலையில் மகா சிவராத்திரி தினமான இன்று அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இதற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் வெளியிட்டு உள்ளது.

இதன்படி சிவராத்திரியை முன்னிட்டு கோவில்களில் கூட்டம் கூடுவதை தவிர்க்க வேண்டும். ஒரேநேரத்தில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் கோவிலில் இருக்கக்கூடாது. கோவில்களுக்கு கூட்டமாக சேருவதற்கு பதிலாக வீட்டில் இருந்தபடியே பிரார்த்தனை செய்யலாம்.

கோவில் நிர்வாகிகள் வளாகத்தில் கிருமிநாசினி தெளித்து சுத்தம் செய்வதை உறுதி செய்யவேண்டும். மேலும் கோவிலுக்குள் வருபவர்கள் சமூக இடைவெளி கடைப்பிடிப்பதுடன், முகக்கவசம் அணிவதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு இரசு தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# மியன்மாரில் இன்றும் 7 பேர் சுட்டுக் கொலை

இன்றைய தினம் வியாழக்கிழமையும் மியன்மாரில் இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 7 பேர் கொல லப்பட்டுள்ளனர் என உள்ளூர் ஊடகங்களும் மனித உரிமைக் குழுவான அம்னஸ்டி இன்டர் நேஷனலும் தெரிவித்துள்ளன.

மியன்மாரில் மத்திய நகரரான மெயிங்கில் 6 பேர் கொல்லப்பட்டனர் என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு இறந்தவர்களின் உடல்களை மருத்துவ மனைக்கு கொண்டு செல்ல உதவிய ஒருவர் தொலை பேசி மூலம் ராய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்தார். அதே நேரம் அங்குள்ள ஒரு சுகாதார ஊழியர் ஒரு வரும் இந்த ஆறு உயிரிழப்புக்களையும் உறுதிப் படுத்தினார்.



ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்த 31 வயதானத் தெரிவிக் கையில் நாங்கள் அமைதியாக எதிர்ப்பு தெரிவித்தோம், அவர்கள் இதைச் செய்தார்கள் என்று என்னால் நம்ப முடியவில்லை. என தமது அதிர்ச்சியை வெளியிட் டார்.

அதே நேரம் மியன்மாரின் மிகப்பெரிய நகரமான யாங்கோனின் வடக்கு டகோன் மாவட்டத்தில் ஒருவர் கொல்லப்பட்டதாக உள்நாட்டு ஊடகங்கள் தெரிவித் துள்ளன.

அரசியல் கைதிகளுக்கான ஆலோசனைக் குழு வினுடைய தகவலின்படி , ஆங் சான் சூகியின் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கு எதிரான பெப்ரவரி 1 ஆட்சி கவிழ்ப்பிலிருந்து நேற்று வரைக்கும் 60 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாகவும் சுமார் 2,000 பேர் பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள் ளதாகவும் தெரியவருகின்றது.

## ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் 30 பேர் பலி ராணுவத்தின் அதிரடி தாக்குதலில் வீழ்ந்தனர்



ஆப்கானிஸ்தானில் அந்த நாட்டு அரசுக் கும் தலிபான் பயங்கரவாத அமைப்புக்கும் இடையே 20 ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடந்து வருகிறது. முடிவில்லாமல் நீளும் இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வர இருதரப்பும் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் கத் தார் தலைநகர் தோகாவில் அமைதி பேச்சு நடத்தி வருகிறது.

இந்தபேச்சில் குறிப்பிடத்தக்க முன்னேற் றம் எதுவும் இதுவரை ஏற்படாத நிலையில் ஆப்கானிஸ்தானில் பயங்கரவாத தாக்கு தல்கள் தொடர்ந்து வருகின்றன. இராணுவ வீரர்களையும் பொலிஸாரையும் குறிவைத்து தலிபான் பயங்கரவாதிகள் தொடர் தாக்குதல் களை நடத்தி வருகின்றனர்.

அதே சமயம் அவர்களை ஒடுக்கும் வித மாக இராணுவமும் தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது. அந்த வகையில் ஆப்கானிஸ்தா னின் தெற்கு மாகாணமான காந்தஹாரில் உள்ள அர்கந்தாப் மற்றும் ஜாரி மாவட்டங்களில் தலிபான் பயங்கரவாதிகளின் நிலைகளை குறிவைத்து இராணுவம் அதிரடி தாக்குதல் களை நடத்தியது. இதில் 30 பயங்கரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டனர். மேலும் 8 பயங் கரவாதிகள் படுகாயமடைந்தனர்.

## திடீரென கோபமடைந்த தாய்லாந்து பிரதமர் செய்தியாளர்கள் மீது சானிடைசர் தெளிப்பு!



தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான் – ஓச்சா நேற்று செய்தி யாளர்களை சந்தித்தார். அப்போது, 3 அமைச்சர்களுக்கு சிறைத்தண் டனை விதிக்கப்பட்டதையடுத்து, அமைச்சரவையில் வெற்றிடமாக உள்ள இடங்களுக்கு நியமிக்கும் சாத்தியமான தலைவர்கள் குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப் பினர்.

இதனால் விரக்தியடைந்த அவர், கேள்விக்கு பதிலளிப்பதை தவிர்க் கும் வகையில் தனது கையில் இருந்த சானிடைசரை செய்தியாளா களின் முகத்திற்கு நேரே தெளித்த வாறு புறப்பட்டுச் சென்றார். செய்தி யாளர்களுடன் கோபமாக பேசிய துடன், அவர்கள் கூறுவதை காது கொடுத்து கேட்காமல் சென்றுவிட் டார். அவரது இந்த செயல்பாட்டை பார்த்து செய்தியாளர்கள் திகைத் தனர்.

பிரதமர் பிரயுத் சாதாரணமாக அனைவரிடமும் பேசக்கூடியவர். சில நேரங்களில் நகைச்சுவையா கவும் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தவர். ஆனால் பெரும் பாலும் செய்தியாளர்களை திட்டு வார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அர்ஜென்டினாவில் காட்டுத் தீ

ஆர்ஜென்டினா நாட்டின் சுபட் மாகாணத்தில் பயங்கர காட்டுத் தீ பற்றி எரிந்து வருகிறது.

சுபட் மாகாணத்தில் உள்ள வனப் பகுதியில் திடீரென பற்றிய காட்டுத் தீ நாலாபுறமும் வேக மெடுத்து பரவி வரு கிறது. விண்ணை முட்டும் அளவுக்கு புகை வெளியேறி வருவதால் அப்பகுதியே புகை மண்டலமாக காட்சி அளிக் கிறது.

வனப் பகுதியில் பற்றிய தீ குடியிருப்பு பகுதி களில் புகுந்த நிலையில் அனல் தாங்க முடியாமல் மக்கள் பரிதவித்து வரு கின்றனர். தீ பற்றியதற் கான காரணம் தெரிய வராத நிலையில் உள்ளூர் தீயணைப்பு துறையினர் மற்றும் தன்னார்வ தொண் டர்கள் தீயை அணைக்க போராடி வருகின்றனர்.



## காங்கோவில் மலை நிறைய தங்கம் போட்டி போட்டு எடுத்து சென்ற மக்கள்

மத்திய ஆபிரிக்க நாடான காங்கோவின் தெற்கு கிவு மாகாணத்தில் லுகிகி என்ற கிராமம் உள்ளது. இங்குள்ள ஒரு மலையில் உள்ள மண்ணில் 60 முதல் 90 சதவீதம் வரை தங்கத்தாது இருப்பதை உள்ளூர்வாசிகள் சிலர் கண்டுபிடித்துள்ளனர். இந்த செய்தி காட்டுத் தீ போல கிராமம் முழுவதும் பரவி யதையடுத்து மக்கள் அனைவரும் மண்வெட்டி உள்ளிட்ட ஆயுதங்களுடன் மலைப் பகுதிக்கு விரைந் தனர்.

அங்கு அவர்கள் போட்டி போட்டுக்கொண்டு மண்ணை தோண்டினர். பின்னர் அதனை பைக ளில் போட்டு வீட்டுக்கு எடுத்துச்சென்று தண்ணீரில் அலசி தங்கத் தாதுக்களை எடுத்தனர். இது தொடர் பான வீடியோவை அகமது அல்கோபாரி என்ற பத்தி ரிகையாளர் டுவிட்டரில் பகிர்ந்ததை தொடர்ந்து, அது சமூக வலைதளங்களில் வைரலானது.



இதனிடையே இந்த தகவல் அரசுக்கு தெரிந்த வுடன் மலையில் மண்ணை தோண்டுவதற்கு அதி காரிகள் தடை விதித்தனர். இந்த மலை முழுவதி லும் தங்கத் தாது இருக்கலாம் என நம்பப்படுகிறது. எனவே மலையை சுற்றிலும் பாதுகாப்பு படை வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

## ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனத்திடம் அதிக தடுப்பூசிகள் பெற அமெரிக்கா திட்டம்



ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனத்தினிடம் இருந்து கூடுதலாக 10 கோடி கொரோனா தடுப்பூசிகளைப் பெற அமெ ரிக்க அரசு தரப்பில் திட்டமிட்டு உள்ளதாக வெள்ளை மாளி கையின் மூத்த ஆலோசகர் அண்டி ஸ்லாவிட் (Andy Slavitt) தெரிவித்து உள்ளார்.

ஒருமுறை மட்டும் செலுத்தக்கூடிய வகையில் தயாரிக்கப் பட்டுள்ள ஜான்சன் அண்ட் ஜான்சன் தடுப்பூசியை அவசரகால தேவைக்கு பயன்படுத்திக் கொள்ள அமெரிக்க மருந்து கட்டுப் பாட்டு ஆணையம் அனுமதி அளித்த நிலையில் தடுப்பூசியை வாங்க பைடன் தரப்பிலான அரசு மும்முரம் காட்டியது.

இந்த நிலையில் அமெரிக்காவில் பள்ளி மாணவர் களுக்கு தடுப்பூசி செலுத்த திட்டமிட்டு உள்ள நிலையில் கூடுதல் தடுப்பூசிகளை வாங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## கரீபியன் நாடுகளில் ஒன்றான பஹாமஸ் அருகே தனியார் தீவு ஒன்று விற்கப்படுவதாக அறிவிப்பு

கரீபியன் நாடுகளில் ஒன்றான பஹாமஸ் அருகே உள்ள தீவு ஒன்று விலைக்கு விற்கப்படுவதாக அறிவிக் கப்பட்டுள்ளது. செயின்ட் ஆண்ட்ரூஸ் எனப்படும் லிட்டில் ராக்ட் தீவு சுமார் 730 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்து காணப்படுகிறது.

சிறிய மலைகள், பசுமையான மருத்துவ குணம் கொண்ட லிக்னம் விட்டே காடுகள், ஏராளமான மீன் வளங் கள், அதனை வேட்டையாட வரும் பிளமிங்கோ பறவைகள் ஏராளமான இயற்கை அம்சங்களை தன்னகத்தே கொண் டது லிட்டில் ராக்ட் தீவு.

அமெரிக்க ரியல் எஸ்டேட் நிறுவனமான கான்செர்ஜ் என்ற நிறுவனம் சார்பில் ஏலம் விடப்படுவதாக அறி விக்கப்பட்டுள்ள இந்தத் தீவு ஏறத்தாழ 2 கோடி டொலர் அளவிற்கு ஏலம் போகக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.



## விருப்பமான சாண்ட்விச்சை வாங்க 130 கி.மீ ஹெலிகொப்டரில் பயணம்!



கொரோனா ஊரடங்கின் போது தமக்கு மிகவும் விருப்பமான மெக்டொனால்ட் பர்கரை வாங்க பிரிட்டனில் ஒரு பெண் 100 கிலோ மீற்றர் தூரம் வண்டி ஓட்டி சென்று, பின்னர் அதற்காக அபராதம் செலுத்தினார் என்பது பழைய செய்தி.

இப்போது, வேறு ஒரு நபர் ஊரடங்கு காலகட்டத்தில் விதிகளை மீறி, தனக்கு பிடித்த சாண்ட்விச்சை வாங்க அதே பிரிட்டனில் 130 கிலோமீற்றர் ஹெலிகொப்டரில் வந்துசென்ற தாக, சாண்ட்விச்சை விற்ற பிரிட்டன் உணவு நிறுவனம் ஒன்று வீடியோ வெளியிட்டுள்ளது.

இந்த வீடியோ லட்சக்கணக்கில் பார்வை யாளர்களை கவர்ந்துள்ளது. சாண்ட்விச் வாங்க வந்தாலும், ஊரடங்கை மீறுவது குற் றமல்லவா என அங்கலாய்த்துள்ள பி.பி.ஸி. செய்தி நிறுவனம், இது குறித்து முழுமையாக விசாரிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளது.

# வாகநேரி நீர்ப்பாசன திட்டத்திற்கான மாபெரும் கவனவீர்ப்பு போராட்டம்

மட்டக்களப்பு வாகநேரி நீர்ப்பாசன திட்டத்திற்கான சிறுபோக விவசாய விவசாயிகள் கிரான் பிரதேச செயலாளரை இடமாற்றம் செய்யுமாறு கோரி கூட்டம் நடைபெற்ற வாயில் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் கோரிக்கை குறித்த பதாதைகளை ஏந்தியவாறு கோஷமிட்டனர்.

தமது கோரிக்கை நிறைவேறும் வரை கூட்டத்தைப் பகிஷ்கரிப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இந் நிலையில் சட்டவிரோத மணல் அகழ்விற்கு பிரதேச செயலாளர் ஆதரவு வழங்குகிறார் எனவும் இதனால் மணல் அகழ்வாளர்கள் வயல் பிரதேசம், பாதைகள் மற்றும் நீரோடைகளில் மணல் அகழ்கின்றனர் எனவும் விவசாயிகள் குற்றச்சாட்டுத் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் அதிகாரிகள் மாத்திரம் கூட்டத்தில் பங்கு கொண்டு நெல் வேளாண்மை செய்கை தொடர்பான பல வேறு தீர்மானங்களை எடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தக் கூட்டத்திற்கு மேலதிக அரசாங்க அதிபர் கலந்து கொண்ட போதிலும் விவசாயிகளின் கோரிக்கைக்கு சரியானதொரு தீர்வு வழங்கவில்லையென விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.



## கொலையில் வந்துமுடிந்த புறா வளர்ப்பு பிரச்சினை

புறா வளர்ப்பில் ஏற்பட்ட பழைய பிரச்சினை காரணமாக புத்தளம், கடையாக்குளம் பிரதேசத்தில் இரு குழுக்களுக்கிடையே கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மோதலில் கூரிய ஆயுதம் ஒன்றால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன், இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என புத்தளம் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் முள்ளிபுரத்தைச் சேர்ந்த 34 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

புறா வளர்ப்பில் ஏற்பட்ட பழைய பிரச்சினையேகொலையில்முடிவடைந்துள்ளதாக மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

9 ஆம் திகதி இரவு 9.30 மணியளவில் உயிரிழந்த நபர், கடையாக்குளம் பிரதேசத்தில் உள்ள தனது சகோதரியின் வீட்டுக்கு வந்திருந்த போது, அங்கு வந்த சிலர் புறா வளர்ப்பில் ஏற்பட்ட பழைய பிரச்சினைகளை முன்வைத்து குறித்த நபருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு குழு மோதல் ஏற்பட்டதுடன், மூன்று பிள்ளைகளின் தந்தையான மேற்படி நபரை கூரிய ஆயுதத்தால் தாக்கிய சந்தேகநபர்கள் மேலும் இருவரை காயப்படுத்தியுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் காயமடைந்த இருவர் சிகிச்சைக்காக புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள உயிரிழந்த நபரின் சடலத்தை புத்தளம் நீதிமன்ற நீதிவான், கடந்த புதன்கிழமை காலை நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம் குற்றப்புலனாய்வுப் பிரிவினரும், புத்தளம் தலைமையகப் பொலிஸாரும் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலைகளின் நடமாட்டம் அதிகரிப்பு; கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை



மட்டக்களப்பு,மார்ச் 11

மட்டக்களப்பு, போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் அமைந்துள்ள சிறிய குளங்களில் தற்போது நீர் நிரம்பியுள்ள நிலையில், அக்குளங்களில் முதலைகளின் நடமாட்டம் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் நீருக்காக குளங்களை நாடிச் செல்லும் ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகள் முதலைகளின் பிடிக்குட்படுகின்றன எனவும் கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் அமைந்துள்ள வெல்லாவெளி, பெரியபோரதீவு, கோவில் போரதீவு, பொறுகாமம், பழுகாமம் உள்ளிட் பல இடங்களில் அமைந்துள்ள குளங்களில் இவ்வாறு முதலைகளின் நடமாட்டம் அதிகம் உள்ளதாகவும், இவற்றில் மீன் பிடிப்பவர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## அம்பாறையில் கடும் மழை; காற்றுடன் கூடிய காலநிலை

அம்பாறை, மார்ச் 11

அம்பாறையில்கூடிய காற்றுடன் மழை காலநிலை மாற்றம் திடீரென ஏற்பட்டமையால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொண்டனர். சில இடங்களில் மழை குறைந்து காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்வதுடன் மரங்களின் கிளைகளும் முறிந்து விழுந்துள்ளன.

கடந்த திங்கட்கிழமை திடீரென அம்பாறை மாவட்டத்தின் பெரியநீலாவணை, கல்முனை, நற்பிட்டிமுனை, நாவிதன்வெளி, காரைதீவு, நிந்தவூர், சம்மாந்துறை, அக்கரைப்பற்று ,தம்பட்டை, திருக்கோவில் ஆகிய பகுதிகளில் கடும் மழையுடன் காற்று வீசியது. இதனால் வீதியால் பயணம் செய்த பொதுமக்கள் மற்றும் வாகன சாரதிகள் சிரமங்களை எதிர்கொண்டனர்.

சில இடங்களில் புழுதியுடன் கூடிய காற்று வீசியதுடன் விளம்பர பலகைகளும் சேதமடைந்தன.

## மனைவி, பிள்ளைகள் தாக்கு குடும்பஸ்தர் பரிதாப சாவு!

ஏறாவூர் பகுதியில் குடும்பத்தில் ஏற்பட்ட தகராறால் மனைவி பிள்ளைகள் தாக்கியதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆறுமுகத்தாக்குடியிருப்பு பாரதி வீதியைச் சேர்ந்த 38 வயதுடைய சேர்ந்த கணேஷ் குணராசா என்பவருக்கும் மனைவி பிள்ளைகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட தகராற்றால் மனைவி பிள்ளைகள் குறித்த நபரைத் தாக்கியதில் படுகாயம் அடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிவான் க.ஜீவராணி சம்பவ இடத்தைப் பார்வையிட்ட பின்னர் விசாரணைகளை மேற்கொள்ளும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளதுடன் உயிரிழந்தவரின் பிள்ளைகள் மற்றும் மனைவி ஆகியோர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்புக்கு புதிய பொலிஸ் அத்தியட்சகர்!



மட்டக்களப்பு மாவட்ட புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்க, மத அனுஸ்டானங்களுடன் சம்பிரதாய பூர்வமாக நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக இருந்த எம்.என்.எஸ்.மெண்டிஸ், இரு தினங்களுக்கு முன்னர் இடமாற்றம் பெற்றுச் சென்ற நிலையில், அதற்கான வெற்றிடத்துக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்க பொலிஸ் மா அதிபரால் நியமிக்கப்பட்டார்.

இதனையடுத்து, புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வில் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், 12 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் கலந்துகொண்டு அவரை வரவேற்றனர்.

## மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் பஸ் சேவை உரிமையாளருக்கு மார்ச் வரை சலுகை வழங்க தீர்மானம்

கொவிட் 19தொற்றுநிலைமையில்மாகாணங்களுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்து பஸ் சேவைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு பஸ் உரிமையாளர்களிடமிருந்து அறிவிடப்படும் புதுப்பித்தல் கட்டணம், தாமதக் கட்டணம், விலைமனுக் கோரல் கட்டணம், நேரசூசிகட்டணம், உள்நுழைவு அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் அதிவேக நெடுஞ்சாலை தற்காலிக அனுமதிப்பத்திர கட்டணம் போன்றவற்றை 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை விடுவிப்பதற்காக 2020 நவம்பர் மாதம் 09ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பஸ் சேவைகளை மீள்நிலைக்கு கொண்டு வருவதற்கு மேலும் சில காலம் எடுக்கும் என்பதால், இம் மானியங்களுடன் கீழ்க்காணும் மானியங்களையும் 2021மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை நீடிப்பதற்காகவும் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வருடாந்த விலைமனுக் கோரல் கட்டணத்தின் 10 வீதம் அல்லது 15 ஆயிரம் ரூபா போன்ற பெறுமதிகளில் அதிக பெறுமதி கொண்ட தொகையை அறவிடவும், அதிவேக நெடுஞ்சாலை தற்காலிக அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் 10 வீதத்தை அறவிடவும், நேரசூசி மற்றும் உள்நுழைவு அனுமதிப்பத்திர கட்டணத்தை விடுவிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# சமூகத்தில் அமைதி, நல்லிணக்கம், மகிழ்ச்சியை அடைய சிவபெருமான் அருள்புரிய வேண்டும்!

## சிவராத்திரி தின செய்தியில் ஜனாதிபதி



கொவிட் தொற்றுநோய் பரவலின் காரணமாக கடந்த ஆண்டு இந்து பக்தர்கள் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி மகா சிவராத்திரி கிரியைகளில் ஈடுபட வேண்டியிருந்தது.

அந்த கட்டுப்பாடுகளில் இம்முறை சிறிது தளர்வு இருந்தாலும், கடந்த வருடத்தைப் போன்றே இந்த வருடமும் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றி மகா சிவராத்திரி தினத்தை அனுஷ்டிக்க வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மகா சிவராத்திரி தின தீப ஒளி இந்து மக்களின் ஆன்மீகத்தை ஒளியூட்டுவதைப் போன்றே சமூகத்தில் அமைதி, நல்லிணக்கம் மற்றும் மகிழ்ச்சியை அடைந்துகொள்வதற்கும் சிவபெருமான் அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கிறார் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

சிவராத்திரியை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் இதனைத் தெரிவித்துள்ள ஜனாதிபதி அதில் மேலும் கூறியிருப்பவை வருமாறு -

இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள இந்து பக்தர்கள் சிவபெருமானின் அருள் ஒளி கொண்டு அறியாமை இருள் அகற்றி, ஞானத்தின் மகிமையை அடைவதற்கான பிரார்த்தனையுடன், பழங்காலத்திலிருந்தே மகா சிவராத்திரி தினத்தில் மிகுந்த பக்தியுடன் சமயக் கிரியைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

உலகின் சக்திவாய்ந்த தெய்வமாக அவர்கள் கருதும் சிவபெருமானின் ஆசீர்வாதம் சமூக, பொருளாதார சுபீட்சத்துக்கும் சிறந்த ஆரோக்கியத்துக்கும் மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கும் ஒரு பலமான உந்துசக்தி என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும்.

இந்து சமய பக்தர்களால் அனுஷ்டிக்கப்படும் ஒரு மகத்தான நாளான மகா சிவராத்திரி தினத்தில், அவர்கள் கண் விழித்து பல்வேறு கலாசார பெறுமானங்களுடன் கூடிய செயல்களில் ஈடுபட்டு சிவபெருமானுக்கு பூஜை செய்கிறார்கள்.

இதன் மூலம் நித்திய ஆசீர்வாதங்களை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். மனதை ஒருநிலைப்படுத்தி பக்தி சிரத்தையுடன் சிவ வழிபாட்டில் ஈடுபடுவதன் மூலம் ஆன்மீக உயர்வை அடைய முடியும் என்று இந்து பக்தர்கள் நம்புகிறார்கள்.

பழங்காலத்திலிருந்தே இலங்கை வாழ் இந்துக்களின் இந்த அற்புதமான கலாசார விழா எமது சமூகத்துக்கு அளவிடற்கரிய பெறுமதியை சேர்த்துள்ளது. இந்த சமய நடைமுறைகள் பல்வகை கலை இலக்கிய அம்சங்களைப் போன்றே சிறந்த நடனப் பாரம்பரியத்துக்கும் வழிவகுத்துள்ளது. கடந்த ஆண்டு கொவிட் தொற்றுநோய் பரவலின் காரணமாக, இந்து பக்தர்கள் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி மகா சிவராத்திரி கிரியைகளில் ஈடுபட வேண்டியிருந்தது.

அந்த கட்டுப்பாடுகளில் இம்முறை சிறிது தளர்வு இருந்தாலும், கடந்த வருடத்தைப் போன்றே இந்த வருடமும் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றி மகா சிவராத்திரி தினத்தை அனுஷ்டிப்பார்கள் என்று நாம் நம்புகிறோம்.

மகா சிவராத்திரி தின தீப ஒளி இந்து மக்களின் ஆன்மீகத்தை ஒளியூட்டுவதைப் போன்றே சமூகத்தில் அமைதி, நல்லிணக்கம் மற்றும் மகிழ்ச்சியை அடைந்து கொள்வதற்கும் சிவபெருமான் அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

# இந்துக்களுக்கு மகிழ்ச்சிகர நாளாக சிவராத்திரி தினம் அமையவேண்டும்

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



மஹா சிவராத்திரி தினத்தில் வளமானதொரு எதிர்காலத்துக்கான தமது எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேற இலங்கை வாழ் இந்துக்களுக்கு தமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மஹா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு அவர் இன்று (வியாழக்கிழமை) வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நல்லிணக்கம் மற்றும் புரிந்துணர்வினூடாக ஐக்கியத்துக்கான தேடலில் மேலும் பலம்பெற இறையருள் துணை புரியட்டும் என பிரதமர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மஹா சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பதால் ஆன்மிக விமோசனம் கிடைக்கும் என்பது இந்துக்களின் உயர்வான நம்பிக்கையாகும். இந் நன்னாளில் இறையருளால் நிச்சயம் ஆன்மிக பலம் பெறுவார்கள் என்று பிரதமர் கூறியுள்ளார்.

மேலும் இந்து சகோதர மக்களுக்கு அர்த்தம் பொருந்திய, மகிழ்ச்சிகரமான நன்னாளாக இந்த சிவராத்திரி தினம் அமைய வேண்டுமெனப் பிரார்த்திப்பதாகவும் பிரதமர் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# மனித குலத்தின் அமைதியை மகாசிவராத்திரி குறிக்கின்றது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



மனிதனும் கடவுளும் ஒரே முனையில் சந்தித்து வரம் கொடுக்கும் சிவராத்திரி தினமாக இன்றைய தினம் அமையட்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மஹா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு அவர் இன்று (வியாழக்கிழமை) வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மனிதர்களிடையே நல்லிணக்கத்துக்கும் சக வாழ்வுக்கும் வழி வகுக்கும் பக்தி நாள் என வர்ணிக்கக்கூடிய சிவராத்திரி தினம் மனித குலத்தின் அமைதியைக் குறிக்கின்றது.

நம்பிக்கையின் ஒளி, அனைத்திலும் பிரகாசிக்கட்டும் எனவும் அக மற்றும் புற இருளை சிவராத்திரி விரட்டுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

உலகெங்கிலும் உள்ள அனைத்து இந்துக்களுக்கும் அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும் அர்த்தமுள்ள நாளாக சிவராத்திரி அமையட்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது சிவராத்திரி தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# சஹ்ரானுக்கு சம்பளம் வழங்கி அவர்களை வழிநடத்தியது அரசே!

## எதிர்க்கட்சி உறுப்பினர் கபீர் ஹாசிம் சாட்டை



அரசாங்கம் சஹ்ரானுக்கு சம்பளம் வழங்கி வழிநடத்தி இருக்கின்றது. சஹ்ரானுக்கு சம்பளம் வழங்கியதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பகிரங்கமாக ஏற்றுக்கொண்டிருந்தார். அத்துடன் இந்த தாக்குதலால் நன்மை அடைந்தவர்களே இதன் உண்மை நிலைமைகளை மறைக்க முயற்சிக்கின்றனர்.

இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பதை வெளிப்படுத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டிலே முஸ்லிம்கள் இருக்கின்றனர் என எதிர்க்கட்சி உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

மாவனெல்லை புத்தர் சிலை தகர்ப்பு தொடர்பாக தகவல் வழங்கிய காரணத்துக்காக சஹ்ரானின் குண்டர்களின் துப்பாக்கி சூட்டுக்கு ஆளாகிய எனது இணைப்புச்செயலாளர் படுகாயமடைந்து சுயநினைவு இழந்திருக்கின்றார்.

அவருக்கு எனது சொந்த செலவில் மருத்துவம் செய்துவந்தேன். தற்போதும் அவர் நாட்டு வைத்தியம் செய்துவருகின்றார். அவரின் செயலை மதித்து சிங்கள இளைஞர்கள் அவருக்கு வீடொன்றை நிர்மாணித்துக் கொடுத்துள்ளனர்.

அவரின் மருத்துவ செலவுக்கு அரசாங்கம் உதவி செய்யவேண்டும் என நான் அரசாங்கத்திடம் கேட்டிருந்தேன். எந்த பதிலும் வழங்கவில்லை.

ஆனால் அவரை குணப்படுத்த வெளிநாட்டுக்கு அழைத்துச்செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால் அதற்கு அரசாங்கம் நிதிஉதவிசெய்யவேண்டும் என ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளமை தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக அதிகம் பாதிக்கப்பட்டது கத்தோலிக்க மக்களாவர். அதேபோன்று பாரிய நெருக்கடிகளுக்கு ஆளாகியது முஸ்லிம் மக்களாவர்.

சஹ்ரானின் நடவடிக்கைக்கும் இஸ்லாம் மார்க்கத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இஸ்லாம் ஒருபோதும் இவ்வாறான செயல்களை அனுமதித்ததில்லை.

மேலும் எனது இணைப்புச்செயலாளரின் மருத்துவ செலவுக்கு பணம் வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கேட்டபோது அதற்கு செலவிடவில்லை.

ஆனால் அரசாங்கம் சஹ்ரானுக்கு சம்பளம் வழங்கி வழிநடத்தி இருக்கின்றது. சஹ்ரானுக்கு சம்பளம் வழங்கியதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பகிரங்கமாக ஏற்றுக்கொண்டிருந்தார். அப்படியென்றால் அப்போதை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அறிவுறுத்தியே வழங்கியிருக்கவேண்டும்.

அதேபோன்று 2011ஆம் ஆண்டில் இருந்து சஹ்ரானின் நடவடிக்கை தொடர்பாக முஸ்லிம் அமைப்புகள் முறைப்பாடு செய்திருக்கின்றன.

ஆனால் அப்போதைய அரசாங்கத்தால் அதுதொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தவர் கோட்டாபய ராஜபக்ஷ என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

மேலும் மைத்திரிபால சிறிசேன மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கொலை செய்ய திட்டமிட்டிருப்பதாக நாமல் குமார செய்த முறைப்பாடு தொடர்பாக இன்று எந்த விசாரணையும் இடம்பெறவில்லை.

நாமல் குமாரவின் இந்த முறைப்பாடு காரணமாகத்தான் சஹ்ரான் தொடர்பாக விசாரணை மேற்கொண்டுவந்த பொலிஸ் அதிகாரி நாலக்கசில்வா கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளார். நாமல் குமாரவின் அந்த முறைப்பாடு இல்லாமல் இருந்திருந்தால் சஹ்ரான் கைதுசெய்யப்பட்டிருப்பார்.

எனவே இந்தத்தாக்குதலின் பின்னால் யார் இருக்கின்றார் என்பதை கண்டறிய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே முஸ்லிம் மக்களும் இருக்கின்றனர். அதனால் இந்த விசாரணை அறிக்கை தொடர்பாக கர்தினால் மெல்கம் ரஞ்ஜித்தின் நிலைப்பாட்டுக்கு நாங்களும் ஆதரவளிக்கின்றோம். - என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.03.2021இல் வெளியிடப்பெற்றது.